மே - 26

**"அறிவு இறுமாப்பை உண்டாக்கும். அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும்."**

**- 1கொரி 8 : 1**

தேவ ஏற்பாட்டை மற்றவர்களுக்கு உபதேசிக்க நாடுகிற எல்லாரும் அசாதாரண சோதனைகளிலகப்பட ஏதுவாகிறார்கள். ஆனபடியால், கர்த்தருக்கும் அவருடைய ஜனங்களுக்கும் ஊழியஞ் செய்வதற்குரிய கனம், ஒத்த அதிக அளவு பரிசுத்த ஆவியின் குணசீலங்களையும், அறிவையும் கேட்கிறது. ஆகையால் யாராகிலும் மற்றவர்களுக்குப் போதகராகவும், கர்த்தரின் பிரதிநிதியாகவும் இருப்பவர்கள், பரிசுத்த ஆவியின் எல்லா பல்வேறு குணசீலங்களையும், சாந்த குணத்தையும் சேர்ந்து பயில வேண்டும். அதன் பலனாய், இவைகள் அன்போடு சேர்த்து அறிவுடனே கூடி, தன்னையும் தான் ஊளியஞ் செய்யும் மற்றவர்களையும் கட்டுவிக்கும். **- Z ’97, 277 (R 2218).**

அறிவின் இயற்கையான போக்கு, யாரிடம் அது இருக்கிறதோ, அவர்களில் இறுமாப்பை உண்டு பண்ணும். இந்த அறிவு தன்னுடைய சொந்த கண்டுபிடிப்பு அல்ல என்றும், ஆனால் தேவனுடைய ஒரு ஈவு என்றும் தாழ்மையுடன் அங்கீகரித்தலே இப்படிப்பட்ட பொறுமைக்கு எதிராக ஒருவருக்கிருக்கிற தற்காப்பாகும். அன்பின் இயற்கையான போக்கு குணசீலங்களிலும், பரலோக சிந்தையிலும், நம்முடைய மாம்சத்துக்குரிய அவயங்களை பிரதிஷ்டை செய்யப்பட்ட உபயோகத்திலும், கிறிஸ்துவைப் போலோத்தத் தன்மையின் அம்சங்கள் பலப்படுவதிலும், சமப்படுதலிலும், பூரணமடைதலிலும், தீமையை வெறுப்பதிலும், தவிர்ப்பதிலும், அதற்கு எதிர்ப்பு காட்டுவதிலும் நம்மை கட்டுவிப்பதாகும்.

**- P '32, 48.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

ரோம 11:25; 12:16; நீதி 3:7; 26:12; ஏசா 5:21; 1கொரி 13; யோவா 15:9-17, ரோம 12:9,10; 1தீமோ 1:5; 1பேது 1:22; 1யோவா 4:7,21.

**கோபுர வாசிப்பு : Z ’12, 110 (R 5000)**

**வினாக்கள்:** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றின் பலன் என்ன?